ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2277/02 - 2022 අප්‍රේල් මස 25 වැනි සඳුදා - 2022.04.25

*2277/02 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்***

**3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை**

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்:-*

1. *திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் “SDP சட்டம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அடையாளம் காணப்பட்டதும், ஐ. அ. டொ. 821.6 மில்லியன் எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டுடன் ஓர் அரச - தனியார் - பங்குடைமை (PPP) என்றவாறாக 18 ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக்கு வடிவமைத்தல் - கட்டுதல் - நிதியிடல் - தொழிற்படுத்தல் - பராமரித்தல் மற்றும் கையளித்தல் (DBFOMH) எனும் அடிப்படையிலானதும், புதிய களனிப் பாலத்திலிருந்து இராஜகிரிய ஊடாக அதுருகிரிய வரை நான்கு சாலைவழி ஒழுங்கைகளைக் கொண்ட உயர் நெடுஞ்சாலை ஒன்றை (இதனகத்துப்பின்னர் “கருத்திட்டம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணிப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும் மற்றும் பராமரிப்பதற்குமான கருத்திட்டம் பற்றிய இயைபான தகவல்களை உள்ளடக்கிய அறிவிப்பானது 2021, நவெம்பர் 15 ஆந் திகதிய 2254/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.*

1A - PG 5827 — 531 (2022/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*2. ஐ. அ. டொ. 821.6 மில்லியன் எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டுடன் ஓர் அரச - தனியார் - பங்குடைமை ( PPP) என்றவாறாக, 18 ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதிக்கு வடிவமைத்தல் - கட்டுதல் - நிதியிடல் - தொழிற்படுத்தல் - பராமரித்தல் மற்றும் கையளித்தல் (DBFOMH) எனும் அடிப்படையில், புதிய களனிப் பாலத்திலிருந்து இராஜகிரிய ஊடாக அதுருகிரிய வரை நான்கு சாலைவழி ஒழுங்கைகளைக் கொண்ட உயர் நெடுஞ்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும் மற்றும் பராமரிப்பதற்குமான கருத்திட்டத்தை செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக வெளிப்படுத்துவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் SDP சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி 2022, மாச்சு 14 ஆந் திகதி பெறப்பட்டுள்ளது.*

*3. மேலுள்ள செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமானது “ஐ. அ. டொ. 821.6 மில்லியன் எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டுடன் ஓர் அரச - தனியார் - பங்குடைமை ( PPP) என்றவாறாக, 18 ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதிக்கு வடிவமைத்தல் - கட்டுதல் - நிதியிடல் - தொழிற்படுத்தல் - பராமரித்தல் மற்றும் கையளித்தல் (DBFOMH) எனும் அடிப்படையில், புதிய களனிப் பாலத்திலிருந்து இராஜகிரிய ஊடாக அதுருகிரிய வரை நான்கு சாலைவழி ஒழுங்கைகளைக் கொண்ட உயர் நெடுஞ்சாலை ஒன்றை நிர்மாணித்தல், தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல்”என்றவாறாக அழைக்கப்படுதலும் அறியப்படுதலும் வேண்டும் என்பதுடன், இக்கருத்திட்டத்தைப் பொறுப்பேற்கவுள்ள கருத்திட்டக் கம்பெனி CHEC NKBA எலவேட்டட் ஹைவே (பிறைவேட்) லிமிட்டட் ஆகும்.*

*4. மேற்சொல்லப்பட்ட “ஐ. அ. டொ. 821.6 மில்லியன் எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டுடன் ஓர் அரச - தனியார் - பங்குடைமை ( PPP) என்றவாறாக, வடிவமைத்தல் - கட்டுதல் - நிதியிடல் - தொழிற்படுத்தல் - பராமரித்தல் மற்றும் கையளித்தல் (DBFOMH) எனும் அடிப்படையில், புதிய களனிப் பாலத்திலிருந்து இராஜகிரிய ஊடாக அதுருகிரிய வரை நான்கு சாலைவழி ஒழுங்கைகளைக்கொண்ட உயர் நெடுஞ்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும் மற்றும் பராமரிப்பதற்குமான கருத்திட்டம்” சலுகை உடன்படிக்கை பயனுக்குவரும் தேதியிலிருந்து மூன்று (3) ஆண்டுகளைக்கொண்ட ஒரு காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்டு வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குதல் வேண்டும்.*

*5. இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களிலிருந்தான விலக்களிப்புக்கள், “புதிய களனிப் பாலத்திலிருந்து இராஜகிரிய ஊடாக அதுருகிரிய வரை நான்கு சாலைவழி ஒழுங்கைகளைக்கொண்ட உயர் நெடுஞ்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும் மற்றும் பராமரிப்பதற்குமான கருத்திட்டம்” தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும். மேலும், கருத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை விரைவுபடுத்துவதற்கு, சலுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தேதிக்கும் சலுகை உடன்படிக்கையில் தரப்பட்ட பயனுறும் தேதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியின்போது அட்டவணையில் வாசகம் 2 இலிருந்து வாசகம் 6 வரை தரப்பட்டுள்ளவாறான எவையேனும் இறக்குமதிகளுக்கு அதே சலுகைகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.*

## *அட்டவணை*

### *1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்*

*<u>கூட்டிணை வருமான வரி</u>*

*மூன்று (03) ஆண்டுகால நிர்மாணக் காலப்பகுதியின்போதும், நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டுகால தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் காலப்பகுதியின்போதும் கருத்திட்டத்தினால் தோற்றுவிக்கப்பட்ட இலாபமும் வருமானமும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழான கூட்டிணை வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.*

*<u>பங்கிலாப வரி</u>*

*பதினைந்து (15) ஆண்டுகால தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் காலப்பகுதியின்போதும், அதன் பின்னரான ஓராண்டின் (01) போதும் பங்கிலாப வருமானத்தின் பகிர்ந்தளிப்புத் தொடர்பில் கருத்திட்டக் கம்பெனியின் பங்குதாரர்களுக்குரிய பங்கிலாபங்கள் மீதான வரி விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

*<u>வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிச் செலுத்துகை, ஆலோசகர்களுக்கான கட்டணங்கள், முகாமைத்துவக் கட்டணங்கள் மற்றும் அரசுரிமைப்பணம் ஆகியவற்றின் மீதான வரி</u>*

*கருத்திட்டக் கம்பெனி, பின்வருவனவற்றின் மீதான பிடித்துவைத்சுல் வரிச் (WHT) செலுத்துகையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்:-*

(i) *மூலதனச் செலவினத்துக்காக எடுக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் வட்டி;*

(ii) ஆலோசகர்களுக்குச் செலுத்தப்பட்ட கட்டணங்கள் (மூன்று (03) ஆண்டுகால நிர்மாணக் காலப்பகுதியில் நாற்பது (40) ஆலோசகர்கள் வரை மற்றும் நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டுகால பராமரிப்புக் காலப்பகுதியில் இருபது (20) ஆலோசகர்கள் வரை); அத்துடன்

(iii) முகாமைத்துவக் கட்டணங்களும் அரசுரிமைப்பணச் செலுத்துகைகளும் (மூன்று ) 03) ஆண்டுகால நிர்மாணக் காலப்பகுதியின்போது மொத்தக் கருத்திட்டச் செலவின் ஐந்து (05) சதவீதத்தை விஞ்சாமலும், அத்துடன் நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டுகால பராமரிப்புக் காலப்பகுதியின்போது இரண்டு (02) சதவீதத்தை விஞ்சாமலும்).

மூலதன ஈட்டுகைகள் வரி

மூன்று (03) ஆண்டுகால நிர்மாணக் காலப்பகுதியின்போதும், நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டுகால தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் காலப்பகுதியின்போதும் மூலதன ஈட்டுகைகள் வரிச் செலுத்துகையில் இருந்து கருத்திட்டக் கம்பெனியின் பங்குதாரர்களும் கருத்திட்டக் கம்பெனியும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

தொழிலின்மீதான வருமான வரி

கருத்திட்டத்துடன் தொர்புடைய தொழிலிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களில் இருந்து எழுகின்ற வருமான வரி செலுத்துகையிலிருத்து கருத்திட்டக் கம்பெனியின் வெளிநாட்டு ஊழியர்கள் (தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ நிபுணர்கள்) கீழே தரப்பட்டுள்ளவாறாக விலக்களிக்கப்படுதல் வேண்டும்;

(i) நிர்மாணப் பணி தொடங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று (03) ஆண்டு காலப்பகுதியொன்றுக்காக (அதிகபட்சமாக நாற்பது (40) வெளிநாட்டு ஊழியர்கள் எனும் எண்ணிக்கைக்கு அமைய)

(ii) நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டு காலப்பகுதியொன்றுக்காக (அதிகபட்சமாக இருபது (20) வெளிநாட்டு ஊழியர்கள் எனும் எண்ணிக்கைக்கு அமைய)

**2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்**

சலுகை உடன்படிக்கை பயனுக்குவரும் திகதியிலிருந்து மூன்று (03) ஆண்டுகால நிர்மாணக் காலப்பகுதியின்போதும், அத்துடன் நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டுகால தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் காலப்பகுதியின்போதும், இலங்கை முதலீட்டுச் சபையினால் (இதனகத்துப்பின்னர் BOI எனக் குறிப்பீடு செய்யப்படும்) அங்கீகரிக்கப்பட்டவாறான கருத்திட்டத்துடன் தொடர்புடைய பண்டங்களின் எல்லா இறக்குமதிகளும் மற்றும் கருத்திட்ட நடைமுறைப்படுத்தலுக்காகத் தேவைப்படுத்தப்பட்ட சேவைகளும் சேர்பெறுமதி வரிச் (VAT) செலுத்துகையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

சலுகை உடன்படிக்கை பயனுக்குவரும் தேதியிலிருந்து மூன்று (03) ஆண்டுகால நிர்மாணக் காலப்பகுதியின்போதும், அத்துடன் நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டுகால தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் காலப்பகுதியின்போதும், BOI இனால் அங்கீகரிக்கப்பட்டவாறான கருத்திட்டத்துடன் தொடர்புடைய பண்டங்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மற்றும் கருத்திட்ட நடைமுறைப்படுத்தலுக்காகத் தேவைப்படுத்தப்பட்ட சேவைகள் என்பவற்றின் மீதான சேர்பெறுமதி வரி (VAT) பிற்போடப்படுதல் வேண்டும்.

மேலும், சலுகை உடன்படிக்கையின்கீழ் பெறப்படற்பாலதான வட்டி வருமானம் உட்பட கருத்திட்டக் கம்பெனிக்கு இலங்கை அராசங்கத்தினாலான அரையாண்டுத் தொகை சேவைக் கொடுப்பனவானது நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டுகால தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் காலப்பகுதியின்போது சேர்பெறுமதி வரிச் (VAT) செலுத்துகையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**3. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்**

சலுகை உடன்படிக்கை பயனுக்குவரும் தேதியிலிருந்து மூன்று (03) ஆண்டுகால நிர்மாணக் காலப்பகுதியின்போதும், அத்துடன் நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டுகால தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் காலப்பகுதியின்போதும், கருத்திட்டக் கம்பெனியின் பெயரில் பண்டங்கள் அனுப்பப்பட்டிருந்தால், BOI இனால் அங்கீகரிக்கப்பட்டவாறான கருத்திட்டத்துடன் தொடர்புடைய பண்டங்களின் எல்லா இறக்குமதிகள் மீதும் (கருத்திட்டக் கம்பெனியினால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது எவரேனும் ஒப்பந்தக்காரர்/ கள் அல்லது துணை ஒப்பந்தக்காரர்/கள்ஊடாகப் பெறப்பட்டிருப்பினுஞ்சரி) துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டு ( PAL) விதிப்பனவிலிருந்தும் செலுத்துகையிலிருந்தும் கருத்திட்டக் கம்பெனி விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

***4. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*கருத்திட்டக் கம்பெனியின் பெயரில் பண்டங்கள் அனுப்பப்பட்டிருந்தால், கருத்திட்டக் கம்பெனி, அதன் ஒப்பந்தக்காரர் (கள்) மற்றும் அதன் துணை ஒப்பந்தக்காரர்கள் மூலமான,* BOI *இனால் அங்கீகரிக்கப்பட்டவாறான கருத்திட்டத்துடன் தொடர்புடைய பண்டங்களின் இறக்குமதியானது, சலுகை உடன்படிக்கை பயனுக்குவரும் தேதியிலிருந்து மூன்று (03) ஆண்டுகால நிர்மாணக் காலப்பகுதியின்போதும், அத்துடன் நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டுகால தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் காலப்பகுதியின்போதும், உற்பத்தித் தீர்வை விதிப்பனவிலிருந்தும் செலுத்துகையிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

***5. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்***

*கருத்திட்டக் கம்பெனியின் பெயரில் பண்டங்கள் அனுப்பப்பட்டிருந்தால், கருத்திட்டக் கம்பெனி, அதன் ஒப்பந்தக்காரர் (கள்) மற்றும் அதன் துணை ஒப்பந்தக்காரர் (கள்) மூலமான,* BOI *இனால் அங்கீகரிக்கப்பட்டவாறான கருத்திட்டத்துடன் தொடர்புடைய பண்டங்களின் இறக்குமதியானது, சலுகை உடன்படிக்கை பயனுக்குவரும் திகதியிலிருந்து மூன்று (03) ஆண்டுகால நிர்மாணக் காலப்பகுதியின்போதும், அத்துடன் நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டுகால தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் காலப்பகுதியின்போதும், ஆயவரி (*CESS*) விதிப்பனவிலிருந்தும் செலுத்துகையிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

***6. சுங்கக் கட்டளைச்சட்டம் (235 ஆம் அத்தியாயம்)***

BOI *இனால் அங்கீகரிக்கப்பட்டவாறான கருத்திட்டக் கம்பெனியின் பெயரில் பண்டங்கள் அனுப்பப்பட்டிருந்தால் (நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஏற்பெதிர் பொருட்பட்டியலில் நிரற்படுத்தப்பட்ட பொருட்கள் தவிர), கருத்திட்டக் கம்பெனியினால் அவை நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது எவரேனும் ஒப்பந்தக்காரர் (கள்) அல்லது துணை ஒப்பந்தக்காரர் (கள்) ஊடாகப் பெறப்பட்டிருப்பினுஞ்சரி, கருத்திட்டத்துடன் தொடர்புடைய பொருட்ளின் எல்லா இறுக்குமதிகளும் சலுகை உடன்படிக்கை பயனுக்குவரும் திகதியிலிருந்து மூன்று (03) ஆண்டுகால நிர்மாணக் காலப்பகுதியின்போதும், அத்துடன் நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டுகால தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் காலப்பகுதியின்போதும், சுங்க இறக்குமதித் தீர்வையிலிருந்து (*Customs Import Duty*) விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

*ஆயினும், ஏற்பெதிர் பொருட்பட்டியலிலுள்ள* (negative list) *பொருட்கள், ஒன்றில் இலங்கையில் முழுமையாகத் தயாரிக்கப்படாதவிடத்து அல்லது அவை போதிய தரத்தில், அளவில் மற்றும் கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கான காலவரையறையில் கிடைக்கத்தக்கனவாக இல்லாதவிடத்து அத்தகைய பொருட்களின் ஏதேனும் இறக்குமதி பற்றி* BOI *இனால் கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.*

**மஹிந்த ராஜபக்ஷ, பா. உ,**
*பொருளாதாரக் கொள்கைகள் மற்றும்*
*திட்ட அமுலாக்கல் அமைச்சர்.*

*பொருளாதாரக் கொள்கைகள் மற்றும்*
*திட்ட அமுலாக்கல் அமைச்சு,*
*கொழும்பு,*
*2022, ஏப்பிறல் 25.*

EOG 04 - 0224

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.